## தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - 2014

-----------------------------------------------------------------------------------

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

2014 நவம்பர் 13 ஆந் திகதி பாவனைக்கு எடுக்கக்கூடிய நிலைக்கு கொண்டுவரப்பட்டிருந்த கேட்போர் கூடத்தின் கிரயம் ரூபா 359,116,705 ஆக இருந்த போதிலும், கிரயமாக ரூபா 272,659,213 தொகை மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கிரயமாக இனங்காணப்படாத ரூபா 86,457,492 தொகையானது கிரய மதிப்பீட்டு பரிசீலனைக் குழுவின் சிபாரிசும் நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரமும் தாமதமடைந்ததன் அடிப்படையில் 2016 யூன் 10 வரையிலும் செலுத்தப்படாதிருந்ததுடன் அதற்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் கிரயத்திற்காக பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

நிறுவகத்தின் விடுமுறை விடுதியைப் பயன்படுத்தியதற்காக அறவிடவேண்டிய ரூபா 48,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 4,575,270 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகளுக்கும் ரூபா 8,595,615 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதிகளுக்கும் உரிய மீதி உறுதிப்படுத்தல் கடிதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,718,377 கூட்டுத்தொகையான பெறவேண்டிய பாடநெறிக் கட்டணங்களில் வருடமொன்றை விஞ்சிய ரூபா 665,131 தொகையும் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 89,122 தொகையும் இருந்தன.

(ஆ) ரூபா 1,734,833 கூட்டுத்தொகையான வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பெறவேண்டிய ரூபா 248,468 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய

மீதியாக இருந்ததுடன் ரூபா 11,776 கூட்டுத்தொகையான பெறவேண்டிய அச்சிடல் கட்டணம் 03 வருடங்களை விஞ்சிய மீதியாகும்.

(ஈ) முன்னர் பெறப்பட்ட வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 26,121,790 தொகை 01 வருடம் முதல் 08 வருடங்கள் வரையிலான காலத்திலிருந்தும் ரூபா 79,615 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் தீர்க்கப்படாது காணப்பட்டது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் மற்றும் விதிகளுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1999 பெப்ரவரி 26 ஆம் திகதிய 02/99 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | செல்லிடத் தொலைபேசி வழங்கல் அமைச்சரவை அமைச்சு செயலாளர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு ரூபா 28,000 செலவு செய்து செல்லிடத் தொலைபேசிபொன்று வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க அரசாங்க நிவாகச் சுற்றறிக்கை மற்றும் 2001 பெப்ரவரி 28 ஆந் திகதிய பீஎப்/பீஈ 14 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | ஒதுக்கப்பட்ட வாகனமொன்றைப் பயன்படுத்துகின்ற தலைவருக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது, குழாம் வாகனத்தைப் பயன்படுத்தியதற்காக 12,833 கிலோ மீற்றர்களுக்கு ரூபா 192,939 எரிபொருள் செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.3 ஆம் பந்தி | நிதி அமைச்சரினதும் விடயப்பொறுப்பு அமைச்சரினதும் முன்அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் ரூபா 6,290,515 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டிக்கோவை | |
| | (i) 1.2.1 (சீ) பிரிவு | கொள்வனவின் போது வழங்குனர்களுக்கு சமமான சந்தர்ப்பம் உரித்தாக வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கூட்டுறவுச் சங்கங்களை கணனிமயப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக தனியார் நிறுவனமொன்றுடன் 2013 நவம்பர் 15 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், அதற்கான கொள்வனவுத் தீர்மானம் 2014 ஏப்ரல் 09 ஆந் திகதி கிடைத்திருந்தது. |
| | (ii) 3.6 ஆம் பிரிவு | நிறுவகத்தின் சகல கட்டிடங்களினதும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மற்றும் பூங்காவை அலங்கரிக்கும் நடவடிக்கைகள் தொடர்பான |

| | |
|---|---|
| | ஒப்பந்தம் 2011 ஆம் ஆண்டின் போது அரசாங்க கூட்டுத்தாபனத்துடன் இணைந்த தனியார் கம்பனியொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக கேள்வி கோரப்படாமல் அந்தக் கம்பனியுடன் ஒப்பந்தக் கால எல்லை நீடிக்கப்பட்டு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. |
| (உ) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | ஒவ்வொரு நிதியாண்டிலும் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் அந்த ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டு அடுத்துவரும் ஆண்டின் சனவரி 29 ஆந் திகதிக்கு முன்னர் அறிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 5,786,121 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 706,722 ஆகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,079,349 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் மீண்டிடெழும் செலவினம் ரூபா 7,865,518 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் செயல்முன்னேற்றம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பாடநெறி | 2014 இலக்கிடப்பட்ட | | 2014 உள்ளபடியான | | 2013 உள்ளபடியான | | இலக்கை நிறைவேற்றும் செயல்முன்னேற்றம் சதவீதமாக (பயிற்சி பெற்றவர்களின் பிரகாரம்) |
|---|---|---|---|---|---|---|---|
| | பாட நெறிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெறுனர்களின் எண்ணிக்கை | பாட நெறிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெறுனர்களின் எண்ணிக்கை | பாட நெறிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெறுனர்களின் எண்ணிக்கை | |
| நிரந்தர பயிற்சி பாடநெறி | 06 | 249 | 03 | 143 | 04 | 161 | 57 |
| டிப்ளோமா பாடநெறி | 17 | 300 | 09 | 178 | 08 | 162 | 59 |
| சான்றிதழ் பத்திர பாடநெறி | 15 | 350 | 11 | 169 | 08 | 241 | 48 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| குறுங்கால முகாமைத்துவ அபிவிருத்தி பாடநெறி | 31 | 625 | 16 | 435 | 22 | 577 | 70 |
| வெளிநிறுவனங்களின் கோரிக்கையின் அடிப்படையில் நடாத்தப்பட்ட பாடநெறி | - | - | 07 | 360 | 17 | 558 | - |
| மக்கள் வங்கி உதவியின் கீழ் நடாத்தப்பட்ட பாடநெறி | - | - | 10 | 359 | 04 | 155 | - |
| வெளிவாரிப் பட்டப்படிப்பு மற்றும் தொழிற்தகைமை உதவி நிகழ்ச்சித்திட்டம் | 14 | 350 | 11 | 187 | 10 | 188 | 53 |
| | 83 | 1874 | 67 | 1831 | 73 | 2042 | |

(i) மீளாய்வாண்டின் போது 1174 பயிற்சி பெறுனர்களில் பங்குபற்றலில் நிரந்தர பயிற்சிப் பாடநெறி, டிப்ளோமா பாடநெறி மற்றும் குறுங்கால முகாமைத்துவ அபிவிருத்திப் பாடநெறி போன்ற 54 பாடநெறிகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 756 பயிற்சி பெறுனர்களின் பங்குபற்றலுடன் 28 பாடநெறிகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. அதாவது இலக்கிடப்பட்ட பாடநெறியில் 48 சதவீதமாகும். முன்னைய ஆண்டின் போதும் அதில் 34 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அந்த பாடநெறிகளை நடாத்துதல் நலிவான மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ii) கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் மற்றும் அதற்குரிய வசதிகளை வழங்குதல் நிறுவகத்தின் முதன்மைப் பணியாக இருந்த போதிலும் தலைமை அலுவலகத்தின் வளாகத்தில் கணனி ஆய்வுகூட இணையதள வசதிகள் வழங்கப்படாமையின் அடிப்படையில் கணனி பாடநெறிகளை வெற்றிகரமானதாக நடாத்துதல் பிரச்சினைக்குரியதாக இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பாடநெறிகளிலிருந்து கிடைத்த வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **பாடநெறி** | **2014 ஆம் ஆண்டு** | | **2013 ஆம் ஆண்டு** | **இலக்கை நிறைவேற்றுதல் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **இலக்கிடப்பட்ட** | **உள்ளவாறான** | **உள்ளவாறான** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| நிரந்தர பயிற்சி பாடநெறி | 2,149,472 | 1,642,735 | 1,499,233 | 76 |
| டிப்ளோமா பாடநெறி | 5,829,500 | 3,807,500 | 3,600,800 | 65 |
| சான்றதழ் பத்திர பாடநெறி | 5,370,500 | 1,278,800 | 2,283,676 | 24 |
| குறுங்கால முகாமைத்துவ அபிவிருத்திப் பாடநெறி | 9,786,500 | 7,209,629 | 4,836,581 | 74 |

| | | | | |
|---|---|---|---|---|
| கணக்கீட்டு தொழிற்தகைமைப் பாடநெறி உதவி நிகழ்ச்சித்திட்டம் | 6,372,000 | 1,747,597 | 1,828,470 | 27 |
| வெளிவாரி பட்டப்பாடநெறி | 4,760,000 | 448,750 | 916,200 | 09 |
| | ---------------- | --------------- | ------------------- | |
| மொத்தம் | 34,267,972 | 16,135,011 | 14,964,960 | |
| | ======== | ======== | ========= | |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை கூட்டுறவுச் சான்றிதழ் பாடநெறியை நடாத்துவதற்குப் பதிலாக கணனித் துறைகளை உள்ளடக்கிய ஏனைய துறைகளில் புதிய பாடநெறிகளை ஆரம்பித்தமையின் கரணமாக நிறுவகத்தினால் மீளாய்வாண்டில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சான்றிதழ் பத்திர பாடநெறிகளில் எதிர்பார்த்த வருமானம் ரூபா 4,091,700 இனால் அதாவது 76 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ii) பாடநெறிக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையின் காரணமாக கணக்கீடு தொடர்பான தொழிற்தகைமைப் பாடநெறிக்கான உதவி நிகழ்ச்சித்திட்டத்திலும், வெளிவாரி பட்டப்பாடநெறிகளிலும் இலக்கிடப்பட்ட வருமானத்திற்கு ஒப்பாக உள்ளபடியான வருமானம் 80 சதவீதம் அதாவது ரூபா 8,935,653 தொகையான குறைவும் அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆகஸ்ட் மாதத்தின் போது ரூபா 44.5 மில்லியன் கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட நிறுவகத்தின் கேட்போர்கூடம் 2003 ஏப்ரல் மாதத்தில் முடிவடைய வேண்டியிருந்த போதிலும் அது 2005 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் கேட்போர்கூடத்தின் கூரை உடைந்து விழுந்தமையின் காரணமாக நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கூரையின் முழுமையான நிர்மாணிப்பையும் உள்ளடக்கிய எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 113 மில்லியன் தொகையான புதிய கிரய மதிப்பீட்டில் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு 2009 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கேட்போர்கூட நிர்மாணத் திட்டத்தில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களினால் நிர்மாணங்கள் 2012 மே மாதமளவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மீண்டும் 2012 திசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2013 மார்ச் 31 இல் பூர்த்திசெய்வதற்கு மத்திய உசாத்துணைப் பணியகத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவ்வாறு உரிய திகதியில் கேட்போர் கூடத்தைத் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கும் போது முன்னாள் விடயப்பொறுப்பு அமைச்சர், வரிசை அமைச்சின் செயலாளர் மற்றும் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் 2013 யூன் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது பின்வரும் மாற்றங்களைச் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. இந்த மாற்றஞ் செய்யப்பட்ட விடயங்களுக்காக நிறுவகத்தினால் முன்னர் மற்றும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட செலவினம் முறையே ரூபா 9,200,392 தொகை மற்றும் ரூபா 14,141,823 ஆனமையால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட செலவினம் பயனுள்ள செலவினமாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

* அலுமினியம் யன்னல் மற்றும் கதவுகளைப் கழற்றி செப்பனிட்டு கண்ணாடி பொருத்துதல் மற்றும் அதற்குச் சமமான திரைச் சேலைகளை மீண்டும் இடல்.
* உள்ளேயும் வெளியேயும் வர்ணப்பூக்களை முழுமையாக மாற்றுதல்
* மலசலகூட முறைமையில் ''டைல்'' மற்றும் கழிவறை உபகரணங்களை அகற்றி வேறு சொகுசான உபகரணங்களைப் பொருத்துதல்.

(ii) மேற்கூறப்பட்ட மாற்றங்களைச் செய்தமையினால் அகற்றப்பட்ட பொருட்கள் பழைய அலுவலகத்தின் கட்டிடமொன்றில் விளைவற்று வைக்கப்பட்டிருந்ததுடன் மொத்தக் கிரயத்தின் ஒரு பகுதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) கேட்போர்கூடத்திலிருந்து அகற்றப்பட்ட ரூபா 4,107,280 கிரயமான பொருட்களை கைத்தவிர்க்கும் போது சுயாதீனமான மதிப்பீட்டாளரின் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக பட்டியல்களை உறுதிப்படுத்தி பொறியியலாளரிடமிருந்து உரிய அறிக்கை பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பொருள் விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 1,486,745 தொகையானமையால் ஏற்பட்ட நட்டம் ரூபா 2,620,535 ஆகும். விற்பனைத் தொகை மூலதன பூர்த்தியடையாத கணக்கில் செலவு வைத்ததைத் தவிர கிரயம் மற்றும் அதிலேட்பட்ட நட்டம் கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 102, 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இயற்கையான கற்பாறையொன்றைப் பயன்படுத்தி செதுக்கி மெருகூட்டப்பட்டு வடிவமைக்கப்பட்ட ஞாபகார்த்த கல்லிற்காக ரூபா 500,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,128,195 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(v) 2014 நவம்பர் 13 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்ட இந்த கேட்போர் கூடத்திற்காக செய்யப்பட்ட செலவினம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 369.1 மில்லியனாக இருந்தது. அதில் ரூபா 86.4 மில்லியனுக்காக 2013 நவம்பர் 12 ஆந் திகதிய 012/540/1480/13 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கிரய மதிப்பீட்டு பரிசோதனைக் குழுவின் சிபாரிசைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அமைச்சரவை கொள்வனவுக் குழுவொன்று 2015 ஆகஸ்ட் 05 ஆம் திகதி வரையிலும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) கேட்போர் கூடம் 2014 நவம்பர் மாதத்தில் திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் அதன் இருக்கைகளுக்கிடையே நிலத்தில் உருவாகிய கறையானை ஒழிப்பதற்கு மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தில் நியமிக்கப்பட்ட மாவட்ட செயலகத்தின் விஷேட நிபுணத்துவம் உள்ள உத்தியோகத்தரின் எவ்வித தலையீடுமின்றி 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.2 பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு முரணாக உடன்படிக்கை இன்றியும் தனியார் கம்பனிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு ரூபா 420,895 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் கேட்போர்கூட வளாகத்தில் விரிப்புக்களுக்கிடையே கரையான் பிடித்திருந்ததை காண முடிந்தது. கேட்போர் கூடத்தில் அத்திவாரம் போடும் போது உரிய நியமம் இன்றி கரையானை ஒழிக்கும் மருந்துகள் போடப்படாமையின் காரணமாக இந்த நிலைமை எழுந்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(vii) மீளாய்வாண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கேட்போர் கூடத்திலிருந்து எதிர்பார்த்த வருமானம் ரூபா 6,500,000 ஆக இருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 175,000 தொகை மாத்திரமே உழைக்கக் கூடியதாக இருந்தது. இது எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் 2.6 சதவீதமாகும். பணிப்பாளர் சபையில் அங்கீகாரமின்றியும் பணம் அறவிடப்படாமலும் சமூர்த்தி நலனாளிகளின் செயலமர்வு மற்றும் முன்பள்ளிப் பாடசாலைகளின் விழாக்களை நடாத்துவதற்கு மூன்று சந்தர்ப்பங்களில் சலுகை விலையின் கீழ் வசதிகளை வழங்கியமையால் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 1,163,500 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் ரூபா 7,640,378 தொகை செலவில் நவீனமயப்படுத்தப்பட்ட நிறுவகத்தின் கட்டிடமொன்று உரிய பிரகாரம் கையேற்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

### மதியுரைச் சேவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் கணனிப் பிரிவில் தற்போது காணப்படுகின்ற நிலையினைவிட உயர்ந்த மட்டத்தில் கொண்டு செல்வதற்காக கணனி மதியுரையாளர் ஒருவர் 2012 சனவரி 01 ஆந் திகதி ஒரு வருடகாலத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார். 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.8.2 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரி அங்கீகாரமின்றியும் மதியுரைச் சேவை வழிகாட்டிக் கோவையின் 3.6 வழிகாட்டியின் பிரகாரம் முறையான பிரகாரம் முன்மொழிவுகள் கோரப்படாதும் இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப் பிரமாணம் 71 இன் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி மதியுரைப் படியாக மாதமொன்றுக்கு ரூபா 30,000 வீதம் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்தப்பட்ட மதியுரைக் கட்டணம் ரூபா 1,080,000 ஆகும். அதில் ரூபா 720,000 தொகை உடன்படிக்கை இன்றி செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே சேவையாற்றாத 269 மணித்தியாலங்களுக்காக ரூபா 50,433 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மதியுரைச் சேவை வழங்கிய காலத்தில் முறையான அதிகாரமின்றி நிறுவகத்தின் 4 பாடநெறிகளுக்கு விரிவுரை நடத்துவதற்கான விரிவுரைக் கட்டணமாக ரூபா 52,400 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 03 வருட கால மதியுரைச் சேவை வழங்கிய காலத்தில் கணனி மென்பொருள் தொடர்பான டிப்ளோமா பாடநெறி ஒன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் நடாத்தப்பட்ட கணனி மென்பொருள் தொடர்பான சான்றிதழ்பத்திர பாடநெறியின் விடய சிபாரிசுகளை திருத்துதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயற்திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி மதியுரையாளர் நியமனம் முடிவுறுத்தப்பட்டு உரிய பிராகாரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமல் 2015 ஆம் ஆண்டின் போது வெளிவாரி விரிவுரையாளராக நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 2009 ஆம் ஆண்டு முதல் நிறுவகத்தின் கணனி நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தராக நியமனம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் கடந்த 05 ஆண்டுகளுக்காக நிறுவகத்திற்கு நிறுவகத்தின் விரிவுரையாளரின் மாதாந்த கால அட்டவணை முறைமைக்கான கணனி நிகழ்ச்சித்திட்டத்தை மாத்திரமே அறிமுகப்படுத்தியிருந்தார்.

இந்த நிகழ்ச்சித்திட்டமும் நிறுவகத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. நிறுவகத்தில் நிலையான சம்பளத்தைப் பெறுகின்ற இந்த கணனி நிகழ்ச்சித்திட்டமிடலாளர் இருக்கும் போது 2012 – 2014 காலப்பகுதியின் போது மேற்கூறப்பட்ட பிரகாரம் கணனி மதியுரையாளர் சேர்க்கப்பட்டு ரூபா 1,080,000 தொகை மதியுரைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையுடன் இணைந்து மருந்து உற்பத்தி விலை மதிப்பீடு கணனி நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பிற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டமையால், நிறுவகத்திற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 1,975,000 ஆனமையால் நிறுவகத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 3,055,000 ஆகும்.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009, 2010 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட கேட்போர்கூட முறைமையொன்று, 54 சீட்ரோல் மற்றும் 02 செல்லிடத் தொலைபேசிகள் என்பன களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அதன் பெறுமதி பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் கட்புல செவிப்புலப் பிரிவில் உள்ள மல்டிமீடியா, ஒலி ஒளிபரப்பு உபகரணங்கள் மற்றும் மடி கணனி என்பன பாவனைக்கு எடுக்கக் கூடியதாக இருந்தும் கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக வெளித்தரப்பினர்களிடமிருந்து அந்த உபகரணங்களை வாடகை அடிப்படையில் பெற்று மீளாய்வாண்டின் போது ரூபா 29,400 வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) அபிவிருத்தி நிறுவகம் மற்றும் இந்தியாவின் உள்ளக தேசிய ஒத்துழைப்பு மற்றும் கமத்தொழில் வங்கி பயிற்றுவிக்கும் நிலையம் என்பன ஒன்றிணைந்து மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு பங்குபற்றிய 37 நலனாளிகளின் தங்குமிடக் கட்டணமாக அறவிட வேண்டிய ரூபா 246,000 தொகையில் ரூபா 184,500 தொகை அறவிடப்பட்டமையால் நிறுவனத்திற்கேற்பட்ட நட்டம் ரூபா 61,500 ஆகும்.

(ஆ) கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் அனுபவங்களை பரிமாறிக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக தாய்லாந்தில் ஆசிய கூட்டுறவு கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பான மாநாட்டிற்கு 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வழங்கப்பட்ட அமெரிக்க டொலர் 3,000 தொகையான வங்கிக் கட்டளை 2014 செப்தெம்பர் 01 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் வழங்கப்பட்டமையின் காரணமாக நாணயமாற்று விகிதத்தின் தாக்கத்தினால் ரூபா 10,712 தொகையான கட்டணம் வங்கியினால் அறவிடப்பட்டதுடன் அந்தத் தொகை நிறுவகத்திற்கு ஏற்பட்ட நட்டமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் சேவை ஒப்பந்தத்திற்காக 2013 ஆண்டின் போது அரசாங்க கூட்டுத்தாபனத்துடன் இணைந்த தனியார் கம்பனி ஒன்றுடன் 2014 ஆம் ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில் ஒப்பந்த விலையினை விட மாதத்திற்கு ரூபா 58,650 தொகை அதிகரித்து செலுத்தியமையினால் நிறுவகத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 703,800 ஆகும்.

### 4.6 வாகனப் பயன்பாடு

நிறுவகத்திற்குச் சொந்தமான 02 வானங்கள் முறையான அங்கீகாரமின்றி அமைச்சரின் பிரத்தியேக பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 16,547 கிலோ மீற்றர் ஓடி இருந்தது. அதன் பிரகாரம் பஸ் வாடகை வருமானம் ரூபா 876,230 அறவிடவேண்டி இருந்த போதிலும் அதனை அறவிடுவதற்கோ அல்லது கணக்கீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமையினால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் ஊடாக கணக்காய்வு நடவடிக்கையினை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட போதும் போதிய அளவில் கவனம் செலுத்தப்படாதிருந்த கணக்காய்வுப் பந்திகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2013 ஆம் ஆண்டின் கணக்காய்வுப் பந்திக்குரிய தொடர்பு | கணக்காய்வுப் பந்தியின் சுருக்கம் |
|---|---|---|
| (அ) | 4.1 (அ) | 2001 இன் 1 ஆம் இலக்க கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைக்கப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவன கூட்டிணைப்பிற்கு இணங்கும் வகையில் எதிர்பார்க்கப்பட்ட பிரதான பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 4.3(ஆ) (iii) செயற்பாட்டு செயற்திறனின்மை | சுத்திகரிப்புச் சேவைகள் வழங்கும் உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம், உப ஒப்பந்தம் வழங்கல் முடியாதிருந்த போதிலும், அதற்கு முரணாக ஒப்பந்தத்தைப் பெற்ற தனியார் கம்பனியினால் ஏனைய தனியார் கம்பனி ஒன்றிற்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் நிறுவகம் எவ்வித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக்கட்டுப்பாடு
(இ) சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) மனிதவள முகாமைத்துவம்